**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு**
**முன்னிலை:– திரு.G.அஜய் விக்ரிஷ் குமார்,B.B.A.,LLB.,(Hons)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், பாலக்கோடு**
2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 02 –ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண்.450/2018

CNR No.TNDP05-000221-2018

மாதையன் (வயது 44/2018)
த/பெ.பெரியசாமி. ..... மனுதாரர்/ முறையீட்டாளர்

//இடையே//

1. சின்னசாமி (வயது 59/2018)
   த/பெ. முனியப்பன்.
2. ராஜசேகர் (வயது 37/2018)
   த/பெ. சின்னசாமி.
3. இளையராஜா (வயது 35/2018)
   த/பெ. சின்னசாமி.
4. சேகர் (வயது 34/2018)
   த/பெ. சின்னசாமி.
5. பச்சியம்மாள் (வயது 50/2018)
   க/பெ. சின்னசாமி.
6. லட்சுமி (வயது 33/2018)
   க/பெ. ராஜசேகர்
7. சாமந்தி (வயது 27/2018)
   த/பெ. இளையராஜா.

   **1 முதல் 7 எதிர்மனுதாரர்களின் முகவரி**
   க.எண்.16/61 கனம்பள்ளி தெரு,
   பாலக்கோடு தாலுக்கா. .... எதிர்மனுதாரர்கள்/எதிரிகள்

இம்மனு கடந்த 15.06.2026–ம் தேதி இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கார்த்தீபன்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் யாரும் தோன்றாநிலையில் மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழக்கும்.

**உ த்தரவு**

1. மனுதாரரால் இம்முறையீடு கு.வி.மு.ச. பிரிவு 200–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.02 18:33:39 +0530

**<u>2. மனுவின் சுருக்கம்</u>**

(i) மனுதாரரின் தந்தைக்கும், அவரது சித்தப்பாவிற்கும் பி.கெல்லஅள்ளி, பூங்குட்டை என்றஇடத்தில் உள்ள நிலத்தை பாகப்பிரிவினை செய்துக்கொண்டும், மேற்படி பாக நிலத்திற்க்கு கூட்டு கிணறும், மேற்படி கிணற்றில் மனுதாரரின் நிலத்திற்கு ஒரு நாளும், அவரது சித்தப்பா சின்னசாமி நிலத்திற்கு ஒரு நாளும் கிணற்று நீரை விவசாயத்திற்கு இறைப்பது வழக்கம். இந்நிலையில் கடந்த 24.03.2016–ம் தேதி கூட்டு கிணற்று மோட்டார் பழுதடைந்துவிட்டது, சரிசெய்ய வேண்டி மெக்கானிக்கிடம் கொடுத்துள்ளனர். கடந்த 28.03.2016–ம் தேதி காலை 08.30 மணியளவில் மனுதாரரின் சித்தப்பா/எதிரி சின்னசாமி, அவருடைய மகன்கள், மனைவி மற்றும் மருமகள்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துக்கொண்டு கூட்டு கிணற்றில் மனுதாரரின் அனுமதியின்றி வேறு ஒரு மோட்டார் வைத்து பொது கிணற்றில் நீர் இறைந்துள்ளார்கள், அதை தெரிந்துக்கொண்ட மனுதாரர் பொது கிணற்றில் ஏன் நீர் இறைக்கிறீர்கள் என கேட்டதற்கு 1–வது எதிரி சின்னசாமி 1 மணிநேரம் ஆன பின்பு தண்ணீர் நிறுத்துவதாக சொன்னதால் மனுதாரர் மனிதாபிமான அடிப்படையில் விட்டுவிட்டார்.

ii) அதைத்தொடர்ந்து மதியம் 01.00 மணி ஆகியும் கிணற்றில் தண்ணீர் இறைப்பதை அவர்கள் நிறுத்தவில்லை. மனுதாரர் அவரது தங்கை அற்புதம் ஆகிய இருவரும் தண்ணீர் இறைப்பதை நிறுத்துங்கள் என கேட்டுள்ளனர். பொது கிணற்றில் நீங்கள் மட்டும் தனியாக தண்ணீர் இறைப்பது சரியல்ல என கேட்டதற்கு 1–வது எதிரி இது நான் வைத்த மோட்டார். கிணற்று தண்ணீர் எனக்கு தான் சொந்தம் என்றும் மீறி தடுத்தால் உங்கள் இருவரையும் கிணற்றில் தள்ளி விடுவோம் என மிரட்டியுள்ளார். உயிருக்கு பயந்து மனுதாரரும், அவரது தங்கையும் அங்கிருந்து வீட்டிற்கு வந்துவிட்டர்கள்.

iii) பின்னர் 1–வது எதிரி சின்னசாமி மற்ற எதிரிகளையும் அழைத்துக்கொண்டு மனுதாரரின் வீட்டிற்கு கலகம் செய்யும் நோக்கத்துடன் கையில் இரும்பு கம்பி, கட்டை, கல், கடப்பாறை போன்ற ஆயுதங்களுடன் வந்து மனுதாரரையும், அவரது குடும்ப உறுப்பினர்களான அற்புதம், சங்கீதா ஆகியோர்களை தாக்கியுள்ளர்கள். 1–வது எதிரி சின்னசாமி, மனுதாரர் மாதையனை மரக்கட்டையால் வலது கை, மூக்கு மற்றும் நெற்றியில் தாக்கி அவரை கீறி கீழே தள்ளிவிட்டும், தடுக்க வந்த அவரது தங்கை அற்புதத்தை எதிரி ராஜசேகரன் தான் வைத்திருந்த கடப்பாறையால் வலது கால் மீது தாக்கி எலும்பு முறிவு ஏற்படுத்தியும், அவரை தடுக்க வந்த மனுதாரரின் தம்பி மணிகண்டனை, எதிரிகள் சேகர், இளையராஜா ஆகியோர்களை தாக்கி உடல் முழுவதும் நகத்தால் கீறிவிட்டார்கள், புகார்தாரரின் மனைவி சங்கீதாவை எதிரிகள் பச்சியம்மாள், லட்சுமி, சாமந்தி ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து கட்டையாலும், கையாலும் தாக்கியுள்ளார்கள் எனவும்,

iv) 1–வது எதிரி சின்னசாமி, ராஜசேகர் ஆகியோர்கள் மனுதாரரையும், அவரது குடும்பத்தாரையும் பார்த்து உங்களை கொன்று புதைத்தால் தான் பிரச்சனை தீரும் எனவும், எதிரிகள் பச்சியம்மாள், லட்சுமி மற்றும் சாமந்தி ஆகியோர்கள் மனுதாரரையும், அவரது குடும்பத்தாரையும் பார்த்து தேவிடியா மக்களே, கண்டார ஓலி மகனே என கெட்ட வார்த்தைகளால் திட்டி, உங்களை கூண்டோடு ஒழித்து கட்டினால் தான் கிணறு பிரச்சனை முடியும் என எதிரிகள் அனைவரும் மனுதாரரை மிரட்டியுள்ளார்கள்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.02 18:33:48 +0530

எனவும், அப்போது மணிகண்டனும் அவரது தகப்பனார் கிருஷ்ணன், தாயார் பழனியம்மாள் பக்கத்து நில உரிமையாளர் மாதையன் மற்றும் கண்ணாயிரம் ஆகியோர்கள் வந்து தகராறு சம்பவத்தை தடுத்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள் எனவும்,

v) மேற்படி தகராறு சம்பவத்தில் காயம் அடைந்த மனுதாரர் மற்றும் அவரது சகோதரி அற்புதம், சகோதரர் மணிகண்டன் அவரது மனைவி சங்கீதா ஆகியோர்கள் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர், மனுதாரரின் தங்கை அற்புதம் என்பவருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள் எனவும், எதிரிகள் மனுதாரரையும், அற்புதம், சங்கீதா ஆகியோர்களை அடித்து காயம்படுத்தியது சம்பந்தமாக பாலக்கோடு காவல் நிலையத்தார் பாலக்கோடு, மருத்துவ மனைக்கு வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்று சென்றுள்ளார்கள். இதனை தெரிந்த கொண்ட எதிரி சின்னசாமி அவர்களது குற்ற செயல்களிலிருந்து தப்பிக்க அவர்களை மனுதாரர் தரப்பில் அடித்துவிட்டதாக பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து பொய்யான புகாரை கொடுத்துள்ளார்கள். அதனடிப்படையில் மனுதாரர் மீதும் மற்றும் அவரது குடும்பத்தார் மீதும் தடுக்க வந்த சாட்சிகள் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர். ஆனால் மனுதாரர் கொடுத்த புகார் மீது வழக்கு பதிவு செய்வதாக காவல் அதிகாரிகள் உறுதி அளித்தும் FIR பதிவு செய்யாமல் எதிரிகளுக்கு அனுசரணையாக இருந்து வருகிறார்கள். இது குறித்து தருமபுரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு 21.11.2016–ம் தேதியிட்ட புகார் மனுவை கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும்,

vi) எதிரிகள் அனைவரும் கலகம் செய்யும் நோக்கத்தோடு ஆயுதங்களுடன் சட்ட விரோதமாக ஒன்று கூடி மனுதாரரையும், அவரது மனைவி மற்றும் தங்கை அற்புதம் ஆகியோர்களை கெட்ட வார்த்தையால் திட்டியும், மரக்கட்டையாலும், இரும்பு கடப்பாறையாலும், கையாலும் அடித்து காயப்படுத்தி எலும்பு முறிவு ஏற்படுத்தியும், கொலைமிரட்டல் செய்துள்ளதாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 326, 506(2)–ன் கீழான குற்றசெயல்கள் புரிந்துள்ளார்கள் எனவும் எனவே இவ்வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு இந்த தனி நபர் முறையீடு தாக்கல் செய்துள்ளார்.

3. முறையிட்டாளர் தரப்பில் முறையீட்டாளர் மாதையன் மு.த.சா.1 ஆகவும் சங்கீதா மு.த.சா.2 ஆகவும் அற்புதம் மு.த.சா.3 ஆகவும், மணிகண்டன் மு.த.சா.4 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். முறையீட்டாளர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**4. தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி முறையீட்டாளரின் மனு அனுமதிக்கதக்கதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**<u>தீர்வு</u>**

(i) முறையீட்டாளர் மாதையன் தன்னை மு.த.சா.1 ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் எங்கள் குடும்பத்தாருக்கும், எதிரிகளின் குடும்பத்தாருக்கும் பொது கிணறு உள்ளது எனவும், பொது கிணற்றில்இருந்த தண்ணிரை நாங்கள் ஒரு நாளைக்கும், எதிரி சின்னசாமி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.02 18:33:55 +0530

ஒரு நாளைக்கும் என நிலத்திற்கு தண்ணிர் பாய்ச்சுவோம், இந்நிலையில் மேற்படி கிணற்றில் இருந்து மோட்டார் பழுதடைந்துவிட்டதால் சரி செய்ய கொடுத்து இருந்தோம். இந்நிலையில் எதிரி சின்னசாமி வேறு ஒரு மோட்டாரை பயன்படுத்தி தண்ணீர் பாய்ச்சுக்கொண்டிருந்தார், இதை தான் கேட்டதற்கு இது என்னுடையது நான் அப்படி தான் செய்வேன் எனவும், மீறி கேட்டால் கிணற்றில் தள்ளிவிடுவேன் என கொலை மிரட்டல் விடுத்தார். வாய்தகராறு ஏற்பட்டு வீடு திரும்பிய நிலையில் எதிரி சின்னசாமி, அவரது மனைவி, மகன்கள் ஆகியோர்களுடன் எங்களது வீட்டிற்கு வந்து கெட்ட வார்த்தையால் திட்டியும், கலகம் செய்யும் நோக்கத்தோடு சட்ட விரோதமாக கையில் ஆயுதங்களுடன் ஒன்று கூடியும், கையாலும், கட்டையாலும், இரும்பு கம்பியாலும் தாக்கி காயப்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இது சம்மந்தமான புகார் பாலக்கோடு காவல் நிலையத்தில் அளிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

ii) முறையீட்டாளர் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் சங்கீதா, அற்புதம், மணிகண்டன், ஆகியோர், எதிரிகள் முறையீட்டாளரையும், எங்களையும் கையாலும், கட்டையாலும், இரும்பு கம்பியாலும் அடித்தும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

iii) முறையீட்டாளர் தரப்பில் மாதையன் மு.த.சா.1 ஆகவும், சங்கீதா மு.த.சா.2 ஆகவும்,அற்புதம் மு.த.சா.3 ஆகவும் மற்றும் மணிகண்டன் மு.த.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளது. முறையீட்டாளரின் மனு, சாட்சிங்கள், வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றிலிந்து 1 முதல் 7 எதிரிகளுக்கு எதிராக இம்முறையீட்டினை கோப்பிற்கு எடுக்க முகாந்தரம் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. 1–வது எதிரி இதச பிரிவுகள் 147, 148, 324, 506(2) –ன் கீழும், 2 –வது எதிரி மீது 147, 148, 326, 506(2)–ன் கீழும், 3, 4 எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 323, 506(2) –ன் கீழும், 5 முதல் 7 எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) –ன் கீழும், கோப்பிற்கு எடுக்க முதற்தோற்றம் வழக்கு உள்ளது.

5. எனவே **முடிவாக,** 1–வது எதிரி இதச பிரிவுகள் 147, 148, 324, 506(2) –ன் கீழும், 2 –வது எதிரி மீது 147, 148, 326, 506(2)–ன் கீழும், 3, 4 எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 323, 506(2) –ன் கீழும், 5 முதல் 7 எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) –ன் கீழும், கோப்பிற்கு எடுக்க உத்தரவிடப்படுகிறது. முறையீட்டாளர் தரப்பில் செலுத்தப்படும் படி கட்டளையின் அடிப்படையில் 1 முதல் 7 எதிரிகளுக்கு அழைப்பானை அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 02.07.2026 –ம் தேதியில் அவையறியப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.02 18:34:02 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
பாலக்கோடு.

**1) முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள்**

1) மு.த.சா.1 – திரு. மாதையன்

2) மு.த.சா.2 – திருமதி.சங்கீதா

3) மு.த.சா.3 – திருமதி.அற்புதம்

4) மு.த.சா.3 – திரு.மணிகண்டன்

**2) முறையீட்டாளர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள்** – இல்லை.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.02 18:34:07 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
பாலக்கோடு